**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**O.S. No. 264/2014**

**நாள்.22.04.2026**

**வா.சா. 2 - மாரியப்பன்**

**1, 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். என்னை யார் அழைத்து வந்தார்கள் என்றால் ராஜம்மாள். மேற்படி 1வது வாதி ராஜம்மாளுக்கும் எனக்கும் என்ன உறவுமுறை என்றால் ராஜம்மாள் எனது சித்தி. 4 வது வாதி பூமாரி மகளுக்கு எனது மகனை திருமணம் செய்து வைத்துள்ளேன் என்றால் சரியல்ல எனக்கு குழந்தைகள் கிடையாது. 4 வது வாதி பூமாரி மகளுக்கு எனது மகனை திருமணம் செய்து வைத்துள்ளேன் எனக்கு குழந்தை உண்டு வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு என்ன வயது என்றால் 55. இன்றிலிருந்து 40 வருடங்களுக்கு முன்பாக எனக்கு 15 வயது இருந்திருக்கும் என்றால் சரிதான். 15 வயதில் நான் படித்துக்கொண்டிருந்தேன் என்றால் சரியல்ல விவசாயம் செய்து கொண்டிருந்தேன். வாதிகள் குடும்பத்தில் நேரில் உட்கார்ந்து அவர்களுக்குள்ளாக பாகத்தை நான் செய்து கொடுக்கவில்லை என்றால் சரிதான். வாதிகள் குடும்பத்திற்குள்ளாக சொத்துக்களை யார் யார், எவ்வளவு சொத்து எந்த சர்வே எண்ணில் பிரித்தார்கள் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வாதிகள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை யாருக்காவது விற்றுள்ளார்களா யாரிடம் சொத்துக்கள் அனுபவத்தில் உள்ளது என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வழக்குச் சொத்திற்குள்ள 4 வது வீட்டில் பொன்னுத்தாய் என்பவருக்கு கிரையம் கொடுத்து அவரது அனுபவத்தில் சொத்து உண்டு வீட்டை பூட்டி சாவி வைத்துள்ளார் என்றால் சரியல்ல பொன்னுத்தாய்க்கு விற்ற விபரம் எனக்குத் தெரியாது ராஜம்மாள் தான் வீட்டை பழக்கி வருகிறார் அது மட்டும் தான் தெரியும். ராக்கம்மாள் என்பவர் கணேசன், சூரியன் தாயார் என்றால் கணேசன் தாயார் ராக்கம்மாள் சூரியனுக்கு ராக்கம்மாள் சிறிய தாயார்.

ராக்கம்மாளுக்கு, 1வது வாதி ராஜம்மாள் ஒரு பகுதி சொத்தைக் கொடுத்து ராக்கம்மாள் சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் 2 பங்காக போட்டு கணேசன் பங்கை அவர் அனுபவிக்கிறார், 1வது வாதி ராஜம்மாள் பங்கை அவரே அனுபவித்து வருகிறார். 1வது தபசில் சொத்தில் 42-1/2 சென்டை 1வது வாதி ராக்கம்மாளுக்கு வாய்மொழி கிரையமாக கொடுத்து, ராக்கம்மாள் தான் உரிமையாளராக 1வது தபசில் சொத்தில் 42-1/2 சென்டை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. இன்றைய தேதியில் வாதிகள் தரப்பில் தபசில் சொத்துக்கள் அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. நான் வாதி வகையறா குடும்பத்தில் சம்பந்தம் வைத்துக் கொண்டதால் வாதிகளுக்காக வேண்டி பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1வது வாதி ராஜம்மாள் வகையறா திருவேங்கடம் சென்று எத்தனை வருடம் இருக்கும் என்றால் 20 வருடங்கள் இருக்கும். எனது முதல் விசாரணையில் சொல்லிய சங்கதிகள் குறித்து சாட்சியம் அளிக்க நான் தகுதியற்ற நபர் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் உண்மைக்குப் புறம்பானது என்றால் சரியல்ல.

**1,3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

ALIMA M Digitally signed by ALIMA M
Date: 2026.04.22 18:52:38 +0530